புளொட்டிலிருந்து தீப்பொறி வரையான எனது அனுபவப் பகிர்வுகள் - பகுதி 8

Written by தமிழரங்கம்
Saturday, 11 June 2011 13:14 - Last Updated Tuesday, 14 June 2011 20:57

கேதீஸ்வரனின் மரணத்தின் பின் அவர் கவனித்து வந்த அனைத்து வேலைகளையும் தற்காலிகமாக நானே கவனிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. உமாமகேஸ்வரனின் அழைப்பின் பேரில் மத்தியகுழு உறுப்பினரான கண்ணாடிச் சந்திரன் இந்தியா சென்றிருந்தார். மத்தியகுழு உறுப்பினர்களான பெரியமுரளியும் ஈஸ்வரனும் கூட அப்பொழுது இந்தியாவிலேயே தங்கியிருந்தனர். இதனால் அமைப்புச் சம்பந்தமான அனைத்துவிடயங்களையும் முடிவுகளையும் தளத்திலிருந்த மத்தியகுழு உறுப்பினர்களான குமரன் (பொன்னுத்துரை) மற்றும் பார்த்தனுடன் கலந்து பேசியே எடுத்து வந்தேன்.

திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் செல்வன் (கிருபாகரன்), மூதூர் அமைப்பாளர் அகிலன், அம்பாறை மாவட்ட அமைப்பாளர் ரகு, கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் கிளி மாஸ்டர், வவுனியா மாவட்ட அமைப்பாளர் வவுனியா சிறி, முல்லைத்தீவு அமைப்பாளர் வரதன், மன்னார் அமைப்பாளர் சயந்தன், ஆகியோருடைய தொடர்புகளை பேண வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டேன். மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் அசோக்கும், மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வியும் தமது செயற்பாடுகளை தனித்துவமாகவே செய்து வந்தனர். இவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் மக்களமைப்பைச் சேர்ந்த அமைப்பாளர்கள் செய்துவந்தனர். ஏனைய மாவட்ட அமைப்பு வேலைகளுக்குத் தேவையான நிதி, பிரச்சார ஏடுகளான பத்திரிகை, சஞ்சிகைகள், பிரசுரங்கள் அனைத்துமே யாழ்ப்பாணத்திலிருந்தே விநியோகிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைப்பாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் பற்றிப் பேசும் பொருட்டும், அமைப்பு செயற்பாடுகளை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பொருட்டும் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் கூட்டத்தை கூட்டவேண்டியிருந்தது. திருநெல்வேலியில் இதற்கான இடத்தை விபுல் மூலம் ஒழுங்கு செய்து அங்கு யாழ் மாவட்ட குழு கூடியது. இதுவே புளொட்டின் யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்து உதவி அரசாங்க அதிபர் பிரிவு அமைப்பாளர்களையும் ஒன்றுசேர்த்துக் கூட்டப்பட்ட முதலாவது குழுக் கூட்டமாக அமைந்தது.

1 / 4

புளொட்டிலிருந்து தீப்பொறி வரையான எனது அனுபவப் பகிர்வுகள் - பகுதி 8

Written by தமிழரங்கம்
Saturday, 11 June 2011 13:14 - Last Updated Tuesday, 14 June 2011 20:57

இதில் ஜீவன் (தீவுப்பகுதி அமைப்பாளர்), பாலா(சுன்னாகம் அமைப்பாளர்), உரும்பிராய் ராசா (கோப்பாய் அமைப்பாளர்), குரு (கரவெட்டி அமைப்பாளர்), கணேஸ் (பருத்தித்துறை அமைப்பாளர்), பவான் (தெல்லிப்பளை அமைப்பாளர்), மைக்கல் (சாவகச்சேரி அமைப்பாளர்), வினோச் (யாழ்ப்பாணம் அமைப்பாளர்), சுகந்தன்-சிறி(வட்டுக்கோட்டைஅமைப்பாளர்) சின்னப்பத்தர் (இளவாலை அமைப்பாளர்), ரமணன் (தகவல்துறைப் பொறுப்பாளர்), சிவானந்தி, தர்மலிங்கம், விபுல் ஆகியோர் பங்குபற்றினர். இக்கூட்டத்தில் பங்குபற்றிய அனைத்து அமைப்பாளர்களின் கருத்துக்களும் சுதந்திரமாகவும் வெளிப்படையாகவும் முன்வைக்கப்பட்டன. தனிநபர் முடிவுகள், தனித்தனியே பிரச்சனைகளைக் கையாளுதல் என்பதற்கு மாறாக, குழுரீதியான செயற்பாடுகள், குழுரீதியான முடிவுகள் என்பதை நோக்கி யாழ் மாவட்ட அமைப்பு செயற்படத் தொடங்கியிருந்தது.

மக்களமைப்பைக் கட்டியெழுப்புதல், பயிற்சிக்கு ஆட்களை அனுப்புதல், ஏனைய இயக்கங்களுடனான முரண்பாடுகளைக் கையாளுதல், கருத்தரங்குகள், பாசறைகள் நடத்துவதற்கான ஆட்கள் பற்றாக்குறை போன்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு விவாதிக்கப்பட்டன. இவற்றிற்கான தீர்வுகளையும் கூடவே குழு முன்மொழிந்தது.

புளொட்டின் படகுக்குப் பொறுப்பாக இருந்த சதீஸ் படகை கடத்தல் தொழிலுக்கும் பாவித்து வருவது குறித்தும், சுந்தரம் படைப்பிரிவினரின் தன்னிச்சையான செயற்பாடுகள் குறித்தும், குறிப்பாக குரு, கணேஸ், பாலா, சுகந்தன் (சிறி), உரும்பிராய் ராசா, பவான் போன்றோர் கேள்விகளை எழுப்பியிருந்தனர். முதலாவது யாழ் மாவட்டக்குழுக் கூட்டத்திலேயே தீர்வில்லாமல் எரிந்து கொண்டிருக்கும் ஓரு பிரச்சனையாக சுந்தரம் படைப்பிரிவினரின் பிரச்சனை இருந்தது. இதனால் இதுபற்றி மத்தியகுழு உறுப்பினர்களுடன் கலந்து பேசுவதென்றும், செயலதிபர் உமாமகேஸ்வரனுக்கு இதுபற்றி அறிக்கை அனுப்பிவைப்பதென்றும் முடிவானது.

ஆனால் இதற்குப் பதில் அனுப்பிவைத்த செயலதிபர் உமாமகேஸ்வரனோ சுந்தரம் படைப்பிரிவினரின் செயற்பாடுகள் குறித்து தான் கவனத்தில் எடுப்பதாகவும், சதீஸ் விவகாரம் கழகத் தோழர் ஓருவர் மேல் ஆதாரமில்லாமல் அபாண்டமாக குற்றம் சாட்டும் ஓரு செயல் என்றும் குறிப்பிட்டிருந்தார். பின்னாட்களில் படகுப் பொறுப்பாளர் சதீஸ், புளொட் சித்திரவதை முகாமான ஓரத்தநாட்டில் இருந்த "B" காம்புக்கு விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டு, புளொட்டினால் கொலை செய்யப்பட்டார்.

உமாமகேஸ்வரனின் அழைப்பின் பேரில் இந்தியா சென்றிருந்த கண்ணாடிச் சந்திரனிடம் பார்த்தனுக்கு மடல் ஒன்றை உமாமகேஸ்வரன் கொடுத்தனுப்பியிருந்தார். பார்த்தனுக்கு அனுப்பப்பட்ட அந்த மடலில் இந்தியாவில் முதற்கட்டமாக பயிற்சி

2 / 4

புளொட்டிலிருந்து தீப்பொறி வரையான எனது அனுபவப் பகிர்வுகள் - பகுதி 8

Written by தமிழரங்கம்
Saturday, 11 June 2011 13:14 - Last Updated Tuesday, 14 June 2011 20:57

முடித்தவர்கள் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட தயாராக உள்ளனர் என்றும், கிழக்கு மாகாணத்தில் தாக்குதல் நடவடிக்கைகளுக்கு தயாராகும்படியும், அதற்காக இராணுவப் பயிற்சி பெற்றவர்களில் ஒரு பகுதியினரை யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப் போவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

உமாமகேஸ்வரனின் மடலின் அடிப்படையில் வேலைகள் தொடங்கப்பட்டது. கண்ணாடிச் சந்திரன் மட்டக்களப்புக்கு புறப்பட்டார். பார்த்தன் மட்டக்களப்பு சென்று பாதுகாப்பாக தங்கி நிற்பதற்கு பாதுகாப்பான இடத்தை திருகோணமலை செல்வனின் (கிருபாகரன்) உதவியுடன் ஒழுங்கு செய்துவிட்டு யாழ்ப்பாணம் திரும்பினார். "புதிய பாதை" பத்திரிகையை இனிமேலும் யாழ்ப்பாணத்தில் அச்சிடுவது முடியாததொன்று என முடிவாகியது.

பார்த்தன் திருகோணமலையில் காந்தீயம் செயற்திட்டங்களிலும், புளொட்டின் நடவடிக்கைகளிலும் பெருமளவுக்கு ஈடுபட்டதாலும், மட்டக்களப்பு சிறையுடைப்பில் அவரது தொடர்பாலும் இலங்கை அரசால் தேடப்படும் ஒரு நபராக இருந்தார். இதனால் பார்த்தன் தனது முகத்தின் தோற்றத்தை மாற்றியே மட்டக்களப்பு செல்லவேண்டியிருந்ததால் முகத்தை மழுங்கச் சவரம் செய்து போலியான அடையாள அட்டையை தயாரித்து மட்டக்களப்புக்கு கடல்மார்க்கமாக செல்ல வேண்டியிருந்தது.

இந்தியாவிலிருந்து இராணுவப் பயிற்சி பெற்ற முதல் தொகுதி புளொட் உறுப்பினர்கள் மட்டக்களப்பு செல்வதற்காக படகுமூலம் யாழ்ப்பாணம் வந்திறங்கினர். இவர்களில் மது, சிலோன், கோன், நந்தன், வாகீசன் ஆகியோரும் அடங்கி இருந்தனர்.

3 / 4

புளொட்டிலிருந்து தீப்பொறி வரையான எனது அனுபவப் பகிர்வுகள் - பகுதி 8

Written by தமிழரங்கம்
Saturday, 11 June 2011 13:14 - Last Updated Tuesday, 14 June 2011 20:57

[illegible]

[illegible]

4 / 4